Koviloor Digital Library

"ஸ்ரீ மகர வாஹினி கங்கா மகாதேவி"

வ ர லா று



"ஸ்ரீ. கங்காதர மூர்த்தி"

(காஞ்சி காமகோடி மடம், ஹரித்வார்)

ACC.NO. 4212
2813/38

Koviloor Digital Library





Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA



ஸ்ரீ மகர வாஹினி கங்கா மகாதேவி

வரலாறு

Koviloor Digital Library



Koviloor Digital Library

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம :

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்

காஞ்சீபுரம்.

முகாம் : திருவானைக்காவல் தேதி : 3-12-1977



கங்கா கங்கேதி யோப்ரூயாத் யோஜனானாம் ஸதைரபி
முச்யதே ஸர்வ பாபேப்யோ விஷ்ணு லோகம் ஸ கச்சதி

(கங்கை என்னும் பெயரை நூறு யோஜனை தூரத்தில் இருந்தாவது எவன் சொல்கிறானோ, அவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு ஜீவனத்தின் முடிவில் விஷ்ணு லோகத்தை அடைகிறான்.)

முக்கிய பண்டிகைகளின் விசேஷங்கள், ஸ்ரீகாமாக்ஷி மஹிமை, பகவத்கீதாஸாரம் முதலிய தெய்விக நூல்களை வெளியிட்டு ஆஸ்திக உலகிற்கு அருந்தொண்டாற்றி வரும் ஸ்ரீ சங்கரா மிஷனின் நிர்வாஹி ஸ்ரீ மீனாக்ஷி ராமன் இப்போது மகரவாஹினி கங்கா தேவியின் வரலாற்றை வெளியிடுவதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

ஆஸ்திகர்கள் இந்நூலின் மூலம் ஸ்ரீ கங்காதேவியின் மஹிமையை உணர்ந்து கங்கையில் ஸ்னானதானாதிகளை செய்து இந்த தேவியின் அனுக்ரஹத்தினால் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.

நாராயணஸ்ம்ருதி:

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ குருப்யோ நம :

"ஸ்ரீ மகர வாஹினி"
கங்கா மகா தேவி

"அந்நதி மூன்று தன்னிலயனகர் புகுந்த — கங்கை
தன்னருந் திறலின் மிக்க பகீரதன் — தவத்தான் மீளப்,
பின்னருமி மையாமுக்கட் பெருந்தகைமுடி மேற்ருங்கி
யிந்நிலவரைப்பிற் செல்ல விறையதில் விடுத்தல் செய்தான்".
(கந்த புராணம்)

இந்தியா முழுவதிலும் புண்ணிய க்ஷேத்திரங்கள் புராணங்களில் பரம ரிஷிகளால் புண்ணியமாகக் கொண்டாடப்பட்ட புராண ஸ்தலங்கள். புண்ணிய தீர்த்தங்கள் தேவர்களாலும், அசுரர்களாலும் புராண இதிகாசங்களில் பூஜிக்கப்பட்டதாக வரலாறுகள் உள்ளது.

எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசிகளுக்குள் ஸம்ஸார ஸாகரத்தை தாண்டி முக்தியடையக் கூடியது மானிட ஜன்மம். பக்தியால் உண்டாகும் ஞானத்தாலன்றி முக்தி பெற முடியாது' ஆகையால் மூர்த்திகளால் எழுந்தருளிய புண்ணிய க்ஷேத்திர தீர்த்த யாத்திரையே சுலபமான மார்க்கம்.

விஷ்ணு புராணம் ஆருவது அம்சம் 2 வது அத்தியாயத்தில் வேதவியாசர் ரிஷிகளுக்கு உபதேசித்ததாவது :—

"கிருத யுகத்தில் பத்து வருஷம் யாகாதிகளால் அடையும் பலனை, திரேதா யுகத்தில் ஒரு வருஷம் யாகாதிகளால் அடையலாமென்றும், துவாபர யுகத்தில் ஒரு மாதத்தில் பூஜை அர்ச்சனைகள் செய்வதால் அடையலாமென்றும், கலியுகத்தில் ஒரு நாளில் பக்தியுடன் சிவ, ராம என்னும் நாம சங்கீர்த்தனத்தால் அப்பலனை அடையலாமென்றும் கூறினர்.

Koviloor Digital Library

இந்தியா முழுவதிலும் அநேக புண்ணிய க்ஷேத்திரங்கள், புண்ணிய தீர்த்த யாத்திரைகள் ஆண்டவனின் மகிமையை பல்வேறு ரூபங்களில் எடுத்துக் காட்டுகின்றன.

வேதாகம புராணங்களுள், வேதம் ''தியான ரூபமாகவும்'', ஆகமம் அதனை விரிவாக்கி சகல அடியார்களும் வழிபடும்படி ''கிரியா ரூபமாகவும்'', புராணங்கள் கதாரூபமாகவும் கூறுகிறது.

விக்ரஹ லீலையில் ''அஷ்டாஷ்டக விக்ரஹலீலை'' என்பது சிவபெருமான் அறுபத்து நான்கு திருவுருவமும் பக்தர்களுக்கு அருள் செய்த திருவிளையாடலெனப்படும். இதையே ''சிவ பராக்ரம லீலைகளில்'' பதினெட்டாவது (18வது) லீலையானது ''கங்காதர மூர்த்தி'' என்பதும், பத்தொன்பதாவது (19வது) ''கங்கா விசர்ஜன மூர்த்தி'' என்கிற இரண்டும் ''சிவபிரான்'' ரூபத்திலும் அடங்கிய வரலாறுகள் தான் ''கங்கா மகாதேவி'' உற்பத்திக்கு காரணம் சொல்லப்பட்டுள்ளது.

''கங்காதரமூர்த்தி''

ஓர் நாள் சிவபெருமான் ஏகாங்கியாக கைலாஸத்திலுள்ள ஓர் சிங்கார வனத்தில் உலாவுகையில் தீடீரென்று எதிர்பாராத வகையில் ஸ்ரீ பார்வதி தேவியார் விளையாட்டாக சிவபெருமான் இரு கண்களையும் தன்னுடைய இருகரங்களால் மறைத்து விட்டாள். சிவபெருமானுடைய இரு விழிகளால் தான் எல்லா ஜோதியும் ஜ்வலிக்கின்றது. அப்பேர்பட்ட ஜோதியை மறைத்தவுடன் எல்லா உலகங்களிலும் ஒளி இல்லாமல் இருள் சூழ்ந்து விட்டது.

ஈஸ்வரியானவள் தன்னுடைய செய்கையால் இருள் சூழ்ந்து விட்டதை உடனே அறிந்து, பதறி பதட்டத்தினால் இமைப் பொழுதில் தன் கையை எடுத்ததும் பத்து கை விரல்களிலும் வியர்வை ஏற்பட, அந்த வியர்வைகளை உதற அந்த பத்து விரல்களிலிருந்து பிறந்து பத்து கங்கைகளாகிப் பெருக்கெடுத்து சப்த சமுத்திரங்களை நோக்கி பிரளயமாக போவதைக் கண்டு, இந்திரன்,

Koviloor Digital Library



ஸ்ரீ கங்கா தரேஸ்வரர்

Koviloor Digital Library



Koviloor Digital Library

பிரும்மா, விஷ்ணு மூன்று பேரும் கைலயங்கிரி சென்று ஸ்ரீபரமேஸ்வரனிடம் பிரளயம் ஏற்பட்டதினுல் அண்டம் முழுவதும், அழிந்து விடாமல் காக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்க சிவபெருமான் ஸ்ரீ தேவி விரல்களில் வியர்வையினுல் ஏற்பட்ட பத்து கங்கைகள் உற்பத்தியாகி உலகத்தை சூழ்ந்து கொண்ட வெள்ளத்தை தமது ஜடைக் கற்றையிலோர் மயிர் முனையில் தரித்தார். அதனுல் ஸ்ரீ பரமேஸ்வரனுக்கு "கங்காதரமூர்த்தி" என்ற பெயர் வழங்கலாயிற்று.

ஸ்ரீ சக்தியின் விரல்களினுல் உதித்ததை ஈசன் தன் செஞ்ஜடை முடியில் தாங்கியதாலும் அஜ்ஜலத்தை புனிதமாக எண்ணி சிவபெருமானிடம் தங்களுடன் தங்கள் இருப்பிடத்திற்கு எடுத்துச் செல்ல மூன்று பேர்களும் பிரார்த்திக்க எம்பெருமான் தன் ஜடையிலிருந்து சிறிது வாங்கி மூவர் கையிலும் தந்தருளினுர். எம்பெருமானிடம் பெற்றதை இந்திரன் அமராவதிக்கும், பிரமன் மனுேவதி பட்டணத்துக்கும், ஸ்ரீ விஷ்ணு வைகுந்தப் பதவிக்கும் கங்கையை கொண்டு சேர்த்ததாக வரலாறுள்ளது.

இரண்டாவது வரலாருனது அயோத்தி நகரை ஆண்ட "சகரன்" அசுவமேத யாகம் செய்வதைக் கண்டு பொருமை கொண்ட "அமரேசன்" வஞ்சத்தால் அசுவமேத புரவியை பாதாளத்தில் தவம் புரிந்து கொண்டிருந்த "கபில முனிவர்" உள்ள இடத்தில் கட்டிவிட்டு போய் விட்டான். "அசுவ மேத புரவியை" காணுமல் போனதினுல் சகர மன்னவன் கட்டளைப்படி அவருடைய மக்கள் அறுபதினுயிரவரும் தரணி முழுவதும் தேடிக் காணுது பாதாளத்தை அடைந்து கபில முனிவர் பக்கத்திலிருப்பதை கண்டு இவர் தான் குதிரையை பாதாளத்திற்கு கொண்டு வந்ததாக எண்ணி கபில முனிவரை துன்புறுத்தினுர்கள். இதனுல் முனிவர் தபஸ் கலைந்து கோபக் கனலுடன் பார்க்க சகர புத்திரர் அறுபதினுயிரம் பேர்களும் சாம்பலாய் எரிந்தனர். இதனை கேள்வியுற்ற அரசன் தன் பெளத்திரனுகிய 'அஞ்சுமானை' அழைத்து எனது புதல்வர்கள் இறப்பினும், எடுத்த யாகத்தை விடலாமோ என்கிற எண்ணத்தில் அஞ்சுமானை பாதாளம் அனுப்பி கபிலவரிடமிருந்து குதிரையை கேட்டு வாங்கி வரும்படி அனுப்பினுன்.

Koviloor Digital Library

குதிரையுடன் திரும்பி வந்த ''அஞ்சுமான்'' பிதாமகரால் அவர் யாகத்தை முடித்ததாகவும் அந்த சந்ததியிலொருவனை ''பகீரதன்'' தன் மூதாதையர்கள் முனிவரால் சாம்பலாக்கப்பட்டு நரகத்தில் மூழ்கியுள்ளாரென்று தெரிந்து அவர்கள் சுவர்க்கமடைய கருதி பிரம்மனை நோக்கி தவம் செய்த பலனால் ''பிரம்மன் பிரத்யக்ஷமாகி ஆ கா ய க ங் கை ஜலம் இறந்தவர்களுடைய அஸ்தியில் பட்டால் சுவர்க்க மடைவார்கள் அ த ற் கா க ஸ்ரீ பரமசிவனை நோக்கி தவம் புரிய அருளியதால் ''பகீரதனும்'' ஈசுவரனை நோக்கி தவம் செய்ததில் சாக்ஷாத் ஸ்ரீ பரமேஸ்வரன் ப் ர த் ய க்ஷ மா கி கங்கை பெண் வடிவாக வந்து கூறியதை விண்ணபித்து காக்கிறேன் என்று கொடுத்த வரத்தைப் பெற்று பகீரதன் மீண்டும் ''கங்கையைக்'' கருதி தவம் செய்தான். அப்பொழுது திரிலோகமும் அலறும்படி ஆரவாரித்துக் கொண்டு தோன்றிய கங்கையை சிவபெருமான் தன் ஜடை நுனியிலிருந்து நதியுரு நண்ணி நானிலத்திறங்கினள். இவ்வாறு வந்த கங்கை பகீரதன் முன் படர்கையில் இறந்தோரைச் சுவர்க்கத்தில் சேர்க்க விரைந்து செல்லுங் கங்கையின் வேகத்தால் ''சந்து முனிவர்'' யாக சாலையழிய அவர் சினம் கொண்டு அந்நீரை உள்ளங்கை-யிலேற்றுக் கொண்டார். பகீரதன் கங்கையைக் காணுமல் சந்து முனிவரிடம் முன் நடந்தவற்றை கூற அவர் மனமிரங்கிச் செவி வழியாக அக்கங்கையை விட்டமையால் 'ஜாஹ்னவி' யெனப் பெயர் பெற்று இறந்து கி ட ந் த சகரர்களுடலுதிர்ந்த சாம்பரிற்படிய அவர்கள் நற்கதியடைந்தனர்.

பகீரதனுற் கொண்டு வரப்படுதலின் கங்கைக்கு ''பாகீரதி'' யெனவும் பெயர் வழங்கலாயிற்று.

மேல் கங்காதரத்திற் கூறிய வண்ணம் சிவப்பிரசாதத்தினுல் பிரமன் தனது மனேவதி நகரிற்குக் கொண்டு போன கங்கை பகீரதன் வேண்டுகோளால் பூமியில் வந்த பொழுது உ ல க ம் அழியாமல் சிவபிரான் தனது ஜடையிலேற்று அவன் பிரார்த்தனைக் கிறங்கி அதிலோர் துளி விடுத்ததினுல் ''கங்கா விசர்ஜன மூர்த்தி'' யென்னும் நாமம் உண்டாயிற்று.

Koviloor Digital Library

ஸ்ரீ மஹா பாரதத்தின் கீல பருவமாகிய ஸ்ரீ ஹரி வம்சத்தின் ஈற்றிலுள்ள ''சேஷ தருமம்'' 25வது அத்தியாயத்தில் ஸ்ரீ பகவான் சொல்வது :—

'ஏ' ''பாண்டவா'' எனது பாதத்தினின்றுதித்த கங்காதேவி ஆனவள் ஸ்ரீ விசுவேஸ்வரன் ஸமீபமாகப் போகும் பொழுது எக்-காலத்திலும் ஸம்ஸாரத்தை அறுக்க விரும்பும் தேவர்களாலும் கூட வழிபடதக்கவள். மேலும் அக்கங்கையின் சிறிய மணல் எவனால் தனது நெற்றியில் தரிக்கப்படுமோ அவ்விடத்திலேயே மூன்றாவது கண்ணும், அதன் கீழ் அர்த்தச் சந்திரனும் தரித்துக் கொள்வான் என்பதும் சிவனது ஸாருப்பியம் வருமென்பதும் கருத்து. அக்கங்கையானது ஒருவனால் குடிக்கப் பட்டால் மோக்ஷத்தை அளிக்கும். பதினாயிரம் யோஜனை தூரத்திலிருந்து எவன் கங்கை!! கங்கை!! யென்றும் சொல்வானோ, மேலும் மூன்று யோஜனை தூரம் செல்வானோ அவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டு கங்கா ஸ்நானப் பயனை அடைவான். அப்படிப்பட்ட இக்கங்கையானவள் மஹா புண்யகரமாதலால், சித்திரை முதலிய மாதங்களில் மற்ற எல்லா நதிகளையும் பிரவேசித்து எல்லாவுலகத்தையும் பரிசுத்தம் செய்கிறாள்.

யாதொரு கங்கையில் நீராடப்பட்டவர்கள் பாவியாயிருந்த போதிலும் தனது தாய் தந்தையர்களின் ஆயிரம் குலங்களைக் கரை யேற்றுவித்து முடிவில் தானும் எனது உலகத்தையடைகிறான். மேலும் அக்கங்கையில் நீராடியவன் எல்லா தீர்த்தங்களிலும் முழுகியவன். அன்றியும் புண்ணிய க்ஷேத்திரங்கள் எல்லாவற்றிலும் வசித்த பயனுள்ளவன்.

இக்கங்கையானவள் மஹா புண்யகரமாதலால், கோதாவரி, பிமரதி, கிருஷ்ணை, ரேவை, ஸரஸ்வதி, துங்கை, பத்திரை, துங்கபத்திரை, யமுனை, காவேரி, சரயு, வேத்திராவதி, தாமிரபரணி, சதத்துரு, மஹாநதி முதலிய எல்லா நதிகளிலும் எப்பொழுதும் இக்கங்கை ஸன்னிதானம் செய்து கொண்டிருப்பாள்.

முனிபுங்கவர்களால் சாஸ்திரங்களில் எவை, எவை புண்ய திதிகளென கூறப்பட்டிருக்கின்றனவோ, அத்திதிகளில் எந்தெந்த

Koviloor Digital Library

ஜலத்தில் ஸ்நானஞ் செய்த போதிலும் உலகம் முழுமையும் பரிசுத்தஞ் செய்ததாகின்றது.

மகரமென்ற தை மாதத்தில் கங்கையில் சுவயமாக கங்கை மாத்திரம் தனித்திருப்பதால், அத் தைமாதத்தில் அக் கங்கையில் செய்யும் ஸ்நான பானுதிகளால் எல்லா உலகத்தோரையும் பரிசுத்தப்படுத்தும். பாவாரண்யத்திற்கு கங்கைக்குச் சமமானது வேறென்றுமில்லை. ஸம்ஸாரமாகும் பிணியைத் தீர்க்க இக்கங்கையே வல்லமையுடையவளாகையால் இக்கங்கையின் திவிலே ஜலத்-தினுலாவது எவன் நனைக்கப்படுவானே அவனும் எல்லா பாவத்-தினின்றும் விடுபட்டவனாய் உயர்ந்த கதியை அடைகிருன்.

நான்முகன் முதலிய எல்லாத் தேவர்களும், உருத்திரர்களும், ஆதித்தர்களும், மருத்துக்களும், கந்தருவர்களும், உலக பாலகர் களும், இயக்கர்களும், குஹ்யர்களும், கின்னரர்களும், பிராம்ஹி, மஹேசுவரீ, இலக்ஷ்மி, இந்திராணி, மேனை, அதிதி, திதி, கிருதாசி, மேனகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, முதலி-யோரும் எல்லாத் தேவ பத்தினிகளும், மற்ற தேவர்களும், மகர மாதத்தின் ஸங்கராந்தி தினத்திலும், சூர்ய சந்திர கிரகண காலத்திலும், வியாதி பாததினத்திலும் மற்றுமுள்ள புண்ணிய தினங்களிலும் இக்கங்கையில் நீராடுவதற்கு வருகின்றுர்கள். மேற் கூறப்பட்ட தினங்களில் எவன் கங்கையில் நீராடுவானே, அவன் ஆயிரம் அசுவ மேதத்தாலும் நூறு வாஜ பேயத்தாலும் எவ்வளவு பயனுள்ளதோ அதை அடைவான்.

ஆதி சங்கர பகவத் பாதர் புனித கங்கையின் மகத்துவத்தை எடுத்துரைப்பது :- ''ஓ'' தேவர்களின் அரசியே!! மூன்று உலகங்-களையும் ரட்சிப்பவளே !! பகவான் சங்கரரின் நல்லிதயத்துக்கு இணக்கமான அந்தரங்கத்திலிருந்து புறப்பட்டு வந்தவளே !! தூய்மையானதும் பேரழகு பொருந்தியதும், சாஸ்வதமானதுமான அலைகளைத் தாலாட்டுபவளே!! புனித கங்காதேவியே உன் பாத கமலங்களைப் பூஜிக்கிறேன். பகீரதனின் புதல்வியே !! பரம சுகத்தை கொடுப்பவளே!! தயையுள்ள தாயே !! புராண இதி-காசங்களில் பெருமையுடன் எடுத்தியம்பப்படும் ஜல தெய்வீகமே!!


A. No.............
நூலகம், கோவிலூர்
Koviloor Digital Library
உ. கோவிலூர்
KOVILOOR
MADALAYAM

உனது பெருமையை [illegible] சிறு அறிவால் எப்படி எடுத்தியம்புவேன், தாயே !! தாயாம் கங்கையே!! உனது [illegible] நீரைப் பருகி மரணப்பயம் தவிர்த்தேன். உன்னிடம் ஈடுபாடு கொண்ட பக்தர்களைப் பற்றி எமனுக்குத் தெரியவே தெரியாது தாயே !!

என் அம்மையே உனது புனித நதியில் நீராடுபவர்களுக்கு மறுபிறவி இல்லை. ஜாஹ்நத் தாயே! பாபங்களைத் தவிர்ப்பவளே! எப்போதும் ஜீவ கங்கையாகவே இருந்து எங்களை இரட்சிக்க வேண்டும். இமயபர்வதத்தின் புதல்வியாகிய புனித கங்கையானவள் ஸ்ரீ பார்வதி தேவியின் மூத்த சகோதரியாவாள் என்பதும், சிவபிரானின் சிரசில் பகீரதனின் தவவேள்விக்கு இறங்கிப் பாய்ந்து பாகீரதியாகச் சிறப்படைகிருள் என்பதும் கருத்து.

பனிபடர்ந்த மேருமலையின் உச்சியில் பிரசன்னமாகி பகீரதன் செய்த தவத்தால் உலகை உய்விக்க தென்திசை நோக்கி பாய்கையில் புனித பத்ரிநாத்தை உருவாக்கி, ரிஷிகேசம் வரும் போது ''ஹர, ஹர'' என்ற பிரம்மானந்த ஒலியை கிளப்பிக் கொண்டு ''கூஷிவாளிக் மலை'' அடிவாரம் வழியாக சமவெளி நோக்கி ''மாயாபுரி'' என்றும், ''கங்காதுவார்'' என்றும், ஹரித்வார் பகுதியில் தான் கங்கை மிக வேகமாகப் பாய்கிருள்.

இந்நதி செல்லும் பாதையில் பல புண்ணிய தீர்த்தங்களான, கங்கோத்ரி, ஹரித்வாரம், பிரும்ம குண்டம், பிரயாகை, காசி, கங்கா சாகர சங்கமம் முதலியன இருக்கின்றன. கங்கைக் கால்வாய்கள் உத்திர பிரதேசத்தையும் மற்றும் பல இடங்களையும் வளமாக்கி டெல்டா பிரதேசத்தை உண்டாக்கி, கடலில் விழுவதற்கு முன் ''பத்மாவாகவும்'', பாகீரதியாகவும், மூவுலகையும் பிணைப்பதால் ''திரிபதகை'' என்றும் செங்கடலில் பாய்ந்து பாதாளம் செல்கிருள்.

முயன்றுர்கள் முடிக்கிருர்கள்

''புல்லினுல் வருடம் கோடி புதுமண்ணுற் பத்துக் — கோடி,
செல்லுமா ஞாலந்தன்னில் செங்கலால் நூறு — கோடி,
அல்லியந் கோதை பாகன் ஆலயம் மடாலயங்கள்
கல்லினுல் கட்டிவைத்தோர் கயிலை விட்டகலார்—அன்றே.
(பழம் பாட்டில்)

Koviloor Digital Library

உலகத்தில் எந்தப் புன்னிய நதிக்கும் இல்லாத தெய்வீக வரலாறுள்ள புனித 'கங்கா மகாதேவிக்கு' ஸ்ரீ மகர வாஹினிக்கு ஓர் ஆலயமில்லையே என்று லோக ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள் விடாமுயற்சியால் ஹிமயம் முதல் குமரி வரையில் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்கள்.

இவைகள் எல்லாம் யாருக்காக? சதுர் வர்ணத்தார்களும் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களுடைய பாபங்களைப் போக்கிக் கொள்ள அங்கெல்லாம் அடைகிறார்கள். அவைகளில் ''பிரும்மகுண்டம்'' என்றும் 'மாயாபுரி' கங்காதுவார், ஹரித்வார் என்கிற புண்ய பூமியில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், அனுக்கிரஹத்தாலும் ஆசீர்வாதத்தாலும் ''ஸ்ரீ மகர வாஹினிக்கு'' தென்னாட்டு கலாச்சார முறைப்படியும், ஆகமப்படியும் தென்னாட்டு ஸ்தபதிகளைக் கொண்டு லக்ஷ கணக்கில் ஆலயம் நிர்மாணித்து முடியுந்தருவாயிலுள்ளது. கோவிலை அடுத்து திறந்த வெளியில் 15 அடி உயரமுள்ள மலைத் தோற்றத்துடன் ஸ்ரீ பரமேச்வரன் தன் ஜடையில் கங்கா தேவியை நிறுத்தியது போலும் பக்கத்தில் ஸ்ரீ பார்வதி தேவியும், மறுபக்கம் பகீரதரிஷியும் நிற்கும் காக்ஷி உருவாக்க திட்டம் உள்ளது. கோவிலைச் சுற்றி அன்றுடம் பூஜைக்கு வேண்டிய புஷ்பங்களுக்காக ஓர் நந்தவனமும் உண்டாக்க எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இக்கோவிலில் ஒவ்வொரு கல்லும் ஸ்ரீகாஞ்சி பெரியவர்களின் சங்கல்பப்படி வைத்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவைகள் தவிர 'ஹரிக்கி பாயரி' பிரும்ம குண்டம் என்கிற இடத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் நான்கு சிஷ்யர்களுடன் பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்துக் கொண்டிருக்கும் 'காக்ஷி அமைக்கப்பட்டுள்ளது. இதை சலவை கற்களால் அலங்கரிக்கப்பட திட்டமுள்ளது.

ஸ்ரீ மகர வாஹினி ஆலய கோபுரத்துக்கு பஞ்ச வர்ணங்களால் சித்தரிக்கும் வேலைகளை துரிதப்படுத்தி வரும் ~~மாசி~~ மே மாதத்தில் (ஆடி மாதத்தில்) கும்பாபிஷேகம் நடக்க வேண்டியிருக்கிறது.

Koviloor Digital Library

இப்படி பல ஆலயங்கள், மடங்கள், ஆகம, வேத பாட சாலைகள் ஆதிசங்கரர் பிரதிஷ்டைகள் செய்வது யாருக்காக? இரு பரமாச்சாரியர்களும் பார்த்து மகிழ்ந்து கொள்ள அல்ல. வருங் கால சந்ததியார்கள் பார்த்து மகிழவும், ஸனாதன தர்மம் தழைத் தோங்கவும் இதிஹாஸ புராணங்கள் என்றென்றும் ஒவ்வொரு-வருடைய ஹிருதயத்திலும் ''ஆலம் விழுது'' படர்வது போல் படர்ந்து இருக்கத் தான் இரு ஆச்சார்யர்களும் அல்லும், பகலும் பாடுபட்டு வருகிறார்கள்.

''அவர்களுக்கென்று ஒன்றும் கிடையாது'' அப்படியிருந்தும் ஹிமயம் முதல் குமரி வரை பல திட்டங்கள் வகுத்து அத்திட்டங்கள் எக்காரணத்தினாலும் தடைபட்டுள்ளது என்பது இல்லை. இதற்கு காரணம் அவ்விருவருடைய தவப் பலனும் அவர்களிடம் உள்ள அருட்காந்த ஸ்ரீசக்தியின் செயலால் நடந்து வருகின்றன, என்றாலும். நாம் அவர்களுடைய சிஷ்யர்கள், பக்தர்கள் என்ன செய்கிறோம்?

''குருவின் மூலமாகத் தான் ஈசுவரனை நெருங்க முடியும்'' என்கிற தத்துவத்தில் நாம் நமது கடமையை செய்ய வேண்டியது.

கடமைகளை செய்ய தவறக் கூடாது என்பது தான் ''கீதோபதேசம்'' ஸனாதன இந்து மதத்தின் ஆணி வேர்கள் இரண்டு தான். அதில் ஒன்று ''கீதை'' என்றால் மற்றொன்று ''கங்கையே''.

எந்த சமயத்திலும் தொண்டு, தானம், தவம் இவற்றைத் துறத்தல் கூடாது. பிரதி உபகாரத்தை எதிர் பாராதலும் ''நான் செய்கிறேன்'' என்ற உணர்வில்லாததும், ஆசையும் பாரபட்சமும் இல்லாததுமான சாத்விகமான செயலையே செய்யுங்கள்.

ஈசன் பால் மனம் வைத்து இறைவனிடம் பக்தி பூண்டு, உங்கள் கடமைகள் யாவற்றையும் அவரிடமே ஒப்படைத்து சரணடையுங்கள்.

உதவி செய்ய விரும்பும் பக்தர்கள்/சிஷ்யர்கள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்காராச்சாரியார் முகாம் ஸ்ரீ மடம் காரியாலயம் அல்லது காஞ்சீபுரம் - 2 க்கு தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Koviloor Digital Library

இச்சிறு நூலை பெற்றுக் கொண்டும் அவரவர்கள் சக்திக்கு தகுந்ததை தங்களுடைய கடமையை செய்தால் ஸ்ரீ கங்கா மகாதேவி உங்கள் பாவங்கள் அனைத்திலின்றும் விடுவித்து உங்களை மகான்களாயும் ஞானவான்களாயும் ஆக்கி விடுவாள்.

ஆண்டவனின் சிறந்த ஆசீர்வாதங்கள் உங்களுக்கு உண்டாவதாக!

சதுர்புஜ கங்காதேவி த்யானம்

சதுர்புஜாம் த்ரிநேத்ராம் ச நதிநத் நிஷேவிதாம்
லாவண்யாமிருத் நிஷ்யந்த் க்ஷிரித்வ் சத்காத்ர-
[யஷ்டிகாம்,
பூர்ணகும்ப சிதாம்போஜ் வரதாபய சத்கராம்
ஏவம் த்யாயேத் ஸி ஸெம் யாம் ச சந்த்ராயுத்
[ஸம்ப்ரபாம்

சாமஷர் யோக்ய மா நாம் ச ஷ்வேத் சத்ரோப்ஷோபிதாம்
ஸுதாப்ளாவித் பூபிரஷ்டாம் திவ் யகம் தானுலோபனும்
த்ரைலோக்ய பூஜித்பதாம் தேவர்ஷிபிர்
பிஷ்ருதாம் ஷ்வேத் வர்ணஹ
தர்மாப்திஸாரே பவீ பாபஹர் கல்பே

ஸிதம்கர் நிஷண்ணும் ஸுப்ரவர்ணும் த்ரி நேத்ராம்
கர்த்ருத் கலஷோத்யத் ஸோத்பலாம் மத்ய பீஷ்டாம்
விதிஹரிஹர்ருபாம் சேந்த்ரு கோடீர் ஜிஷ்டாம்
கலித் ஸித் தூகுலாம் ஜான்னவிம் தாம் நமாமி
ஷ்வேத்வர்ணஹ.

"ஓம்தத்ஸத்"
(இதுவே பரம் பொருளின் உயரிய நாமம்.)

Koviloor Digital Library

வெளியிடுவோர்

மீனாக்ஷி இராமன்
செயலாளர்
ஸ்ரீ சங்கரா மிஷன்
முகாம் :- மதருஸ் தர்மசாலா
ஹரித்வார் (உ.பி.)
பின் : 249 401

ஸ்ரீ சங்கரா மிஷன்
காரியாலயம்
C/o ராணிபர்னிச்சர்
21, மேலாவணி மூல வீதி,
மதுரை-625 001.

நன்கொடை அனுப்புவோர் ஹரித்வாருக்கும் அனுப்பலாம்.

முகவரி :

மீனாக்ஷி இராமன்
செயலாளர்
ஸ்ரீ சங்கரா மிஷன்
முகாம் :- மதருஸ் தர்மசாலா
ஹரித்வார் உ. பி.
பின் : 249 401

ஹரித்வாரில் பார்க்க வேண்டிய முக்கிய கோவில்களும், ஸ்நான கட்டங்களும் :—

ஏழு புரிகளில் மாயாபுரி என்பது ஹரித்வார். மற்ற புரிகளான அயோத்யாபுரி, மதுராபுரி, காசிபுரி, காஞ்சிபுரி; அவந்திகா புரி என்பவை.

ஸ்ரீ மாயா பகவதியானவள் சிருஷ்டியையும், அழிவையும் உண்டாக்குபவளானதாலும், தக்ஷன் யாகம் செய்த போது; சிவபெருமானை அழைக்கவில்லை இருந்தும் ஸ்ரீ பார்வதி போவதை எம்பெருமான் தடுத்ததை கேளாமலும், ஸ்ரீசக்தி பார்வதிதேவி யாகத்திற்கு சென்ற இடத்தில் ஸ்ரீசக்தியான தன் மகள் பார்வதி தேவியை வா என்று கூட தக்ஷன் அழைக்காததால் ஸ்ரீசக்தி வருத்தமுற்று யாகம் செய்த குண்டத்திலேயே விழுந்து மாயமாக போனதினால் மாயாபுரி என்றும், சூர்ய வம்சத்தைச் சேர்ந்த பகீரத மகாராஜா இத்தலத்தில் கடும் தவம் புரிந்து கங்கையை கொண்டு வந்ததினால் ''கங்காதுவார்'' என்றும் ஸ்காந்த புராணத்தில் இந்த ஸ்தலத்தின் பெருமையை விளக்கப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

முதல் ஸ்நான கட்டம் :—

ஹர்க்கி—பாரி என்று சொல்லப்படும் இடம்தான் பிரும்மகுண்டம்:-

"ஸ்வேதராஜன்" பிரம்மாவை நினைத்து பல வருஷம் தபஸ் செய்ததால் பி ர ம் ம ா பிரத்யக்ஷமாகி "ஸ்வேதராஜன்" மனோஇஷ்ட்ட பிரகாரம் இத்தலத்தில் எல்லாவிதமான தேவதைகளும் பிரத்யக்ஷமாக இருக்கும்படியும், சிவ, விஷ்ணு கடாக்ஷம் இருக்கும் படியும், இவ்விடத்தில் ஸ்நானம் செய்வோர்கள் எல்லோருடைய பாவங்களும் நீங்கி ஸ்வர்க்கமடைய வேண்டும் என்று கேட்ட வரத்தை பிரும்மா தந்தருளியதாக வரலாறுள்ளது. இதனுல் "பிரும்மகுண்டம்" என்று ஏற்பட்டு இங்கு ஸ்நானம் செய்து தூய்மையான கங்கை தீர்த்தம் எடுத்துச் செல்லும் வழக்கத்தில் உள்ளது.

மற்றும் கூஷாகாட், பில்வாக்ஷ்வர், நீல்தரா, கன்கல், பிரும்மகுண்டம் சேர்த்து ஆக ஐந்து ஸ்நான கட்டங்கள். கூஷாகாட் என்பது கங்கை பூமிக்கு வந்த காலத்தில் தத்தாத்ரேயர் என்கிற ரிஷி குஷா புல்தரையில் தபஸ் செய்து கொண்டிருந்ததை கண்டு ரிஷியின் சாபத்துக்குள்ளாகி விடுவோம் என்று பயந்து இவ்விடத்தில் கங்கை அவரை சுற்றி வந்து போனதாக வரலாறு. இவ்விடத்தில் தத்தாத்ரேயர் கோவிலும் உள்ளது. இக்கட்டத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரார்த்தம் செய்வோருக்கு மறுபிறப்பு இல்லை என்று வரலாறுள்ளது. (ஆனுல் இவ்விடத்தில் தென்னுட்டு வைதிகர் யாரும் கிடையாது. ஸங்கல்பம் செய்து வைக்கக் கூட கிடையாது என்பது மிகவும் வருந்த தக்க விஷயம்)

ஓர் இடத்தில் இந்திரன் சொல்லியிருப்பதாவது மூன்றறை கோடி தீர்த்தங்களிலுள்ள க்ஷேத்திரங்களில் 'மாயா க்ஷேத்திரத்தைப் போல் புண்யமான பூமி எதுவுமில்லை என்றும் இதே மாதிரி வாயு புராணத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

மாயா தேவி கோவில் :—

சக்தியின் அம்சம் இது. ஸித்த பீடத்தைச் சேர்ந்த மாயா தேவி என்றும் சொல்லுகிறுர்கள்.

Koviloor Digital Library

வில்வகேஷ் மகாதேவ் கோவில் :—

இந்த மகாதேவரை யார் வில்வ பத்திரங்களால் பூஜை செய்கிறார்களோ அவர்கள் தாய் பால் உறிஞ்ச வேண்டியதில்லை என்று வரலாறுள்ளது.

வில்வகேஷ்வர் மகாதேவ் கோவிலுக்கு கிழக்கே நிலா மலையுள்ளது. இங்கு வரும் கங்கைக்கு நீலதாரா என்று பெயர். இந்த நிலா மலையின் பேரில் ''சண்டி மகாதேவி'' கோவிலும், ஹனுமாருடைய தாயாருமன அஞ்சன மகாதேவி கோவிலும் உள்ளது. பாதை கரடு முரடானது சுமார் 4 கி. மீட்டர் மலையின் மேல் ஏறிச் செல்ல வேண்டும். சண்டிகாதேவி தரிசனத்தால் எல்லா பாவங்களும் அழிந்து விடுவதாக வரலாறு.

மானஸா தேவி கோவில் :—

நிலா மலையின் நேர் எதிர் புறம் (கங்கைக்கு அக்கரை) கூஷிவ்லக்'' மலையின் பேரில் மானஸா தேவி கோவில் உள்ளது. இதுவும் கரடு முரடான பாதையில் 3 கி. மீட்டர் தூரம் மலையேறிச் செல்ல வேண்டும்.

எல்லா தேவிகளின் விக்ரஹங்களின் சக்தியானது துர்கை சண்டிதேவியுடன் இணைந்துள்ளது என்று தேவி புராணம் 38 வது அத்தியாயத்திலும், ஸ்காந்த பாகவதத்தில் 47, 48 அத்தியா-யங்களிலும் ''மானஸா தேவி'' மகாத்மியம் விரிவாகவுள்ளது.

பெங்கால், அதாவது கல்கத்தா பக்கமும் பீகார் மகாணத்திலும் ''மங்கல்'' என்றும் மானஸா தேவியின் கதை வரலாறு சுமார் ஐம்பது உள்ளது.

பீகார் பிரதேசத்தில் ''விஷாஹரி பகவதி'' என்றும், ஹரித்வாரில் மானஸா தேவி என்றும் அழைக்கப்படுகிருள். புராண வரலாற்றில் ஈசுவரனுடைய கருணையினுலும், ''காஸ்யப மகா முனிவர்'' மானஸிக சக்தியாலும் ஜனித்ததால் மானஸா தேவி என்று பெயர். இதன் தத்துவம் சாம வேதத்திலுமுள்ளது. இத்தேவி விஷ்ணுவை பூஜித்ததால் ''வைஷ்ணவி சித்த யோகினி'' என்றும்,

Koviloor Digital Library

சிவனை பூஜித்ததால் ''ஶைவி'' (SHAIVI) என்றும், ''ஜனமேஜய'' என்கிற அரசன் பாம்புகளை ஒழிக்க யாகம் செய்த போது பாம்புகளை காப்பற்றியதால் ''நாகேஷ்வரி'' என்றும் அழைக்கப்படுகிறாள்.

ஹரித்வாரில் முக்கியமான இடங்களையும், கோவில்களையும் சுற்றி பார்க்க உ. பி. ரோட்வேஸ் (சர்க்கார் பஸ்) வசதியுள்ளது. ரூபாய். 1-75க்கு சுமார் 3 மணி நேரத்தில் கீழ்க்கண்ட இடங்களை சுற்றிப் பார்க்கலாம்.

1. பீமகோட குளம் :— இது பாண்டவர்கள் ஹிமய மலை சஞ்சாரத்திற்கு ஹரித்வார் வழியாக வந்த போது பீமனுடைய முழங்கால் மோதி இக்குளம் உண்டானதாக வரலாறு.

2. பரமார்த்த ஆச்ரமம் :— இவ்விடத்தில் துர்கை விசேஷம்.

3. ஸப்தரிஷி ஆச்ரமம் :— இவ்வாசிரமத்தில் ஸப்தரிஷிகள் சிலைகள் உள்ளது. இதற்கு எதிர் புறத்தில் கங்கை ஒடுகிறது. இம்மணப்பரங்கில் ஸ்பதரிஷிகள் தபஸ் செய்யும் காலத்தில், ரிஷிகளின் தபஸுக்கு இடஞ்சல் இல்லாதவாறு ஏழு பிரிவாக கங்கை போகும் காக்ஷி அமைந்துள்ளது. கங்கையில் ஜலம் அதிகமாக போகும் காலத்திலும் இந்த ஏழு பிரிவைக் காணலாம்.

4. சாது பேளா ஆச்ரமம்.

5. ஆர்ய பனப்ரஸ்த ஆச்ரமம்.

6. தக்ஷன் யாகம் செய்த இடம் தக்ஷேச்வரர் கோவில் சக்திகுண்டம்.

7. ஹரிசரன் கோவில்.

ஹர்கி பாரி என்னும் (பிரும்ம குண்டம்) இடத்தில் தினமும் மாலை 6-30 க்கு 7 அடுக்கு தீபமும் கற்பூர ஆரத்தியும் கங்கைக்கு எடுக்கிறார்கள். மேலும் பக்தர்கள் ஓர் இலை பூக்குடையில் அகலில் திரி போட்டு எற்றி அதையும் கங்கையில் விடுகிறார்கள்.

Koviloor Digital Library

இவ்விடத்தில் நமது ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார்கள் ஆதிசங்கரர் நான்கு சிஷ்யர்-களுடன் ஓர் அழகான விமானத்தில் அளிக்கும் காக்ஷி பார்க்க பார்க்க பரவசமாக உள்ளது.


ஹரித்வாரில் தங்குவதற்கு அநேக தர்ம சத்திரங்கள் உள்ளது. அதில் மதருஸி தர்மசாலா வி. பெருமாள் செட்டி தர்மம். கர்னுடகா தர்மசாலா, ஸ்ரீ அய்யப்பன் தர்மசாலா மற்றும் வடநாட்டார் தங்க பலவசதிகளுடன் உள்ளது. எல்லாப் பொருள் களும் கிடைக்கக்கூடிய ஸ்தலம்.

''கந்த மாதனங் கயிலைமலை கேதாரங் காளத்தி
கழுக்குன்றங் கண்ணு ரண்ணு
மந்தமாம் பொழிற் சாரல் வடபர்ப்பத மஹேந்திரமா
மலைநீல மேம கூடம்

விந்தமா மலை வேதஞ் சையமிக்க
வியன் பொதிய மலைமேரு உதயமத்த
மிந்துசே கரனுறையு மலை கண்மற்று
மேத்துவோ மிடர்கெடநின் றேத்துவோமே

(திருநாவுக்கரசு நாயனுர் தாண்டகம்)

சுப மங்களம் சுப மங்களம்
சுப மங்களம்



Koviloor Digital Library

வேண்டுகோள்

''ஹரித்வார்'' ஸ்ரீ மகரவாஹினி கங்காமகாதேவி ஆலய நிர்மாணத்துக்கு ஐம்பது ரூபாய்க்குமேல் நன்கொடை அனுப்புகிறவர்களுக்கு ஸ்ரீ கங்காமகாதேவி ப்ரஸாதமான ''ஸ்ரீ கங்கா தீர்த்தம்'' (செப்பு கலசத்தில் தீர்த்தம்) கும்பாபிஷேகம் நடந்த மறுதினம் அனுப்பப்படும். அத்துடன் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்யார்கள் அருளும் ஆசீர்வாதமும், ப்ரசாதமும், திருநீர் (விபூதி) குங்கும ப்ரஸாதமும் வழங்கப்படும்.

மேலும், ஆலயத்துக்கு நித்ய பூஜா விதிகளுக்கு குடம், கங்காளம்; தாம்பாளங்கள், தூபக்கால், அடுக்குதீபங்கள், கற்பூர ஹாரத்தி தட்டுகள், வஸ்திரங்கள், 6 கெஜம் பட்டு புடவைகள், பாவாடை துணிகள், கங்காமகாதேவிக்கு தோடு, மூக்குத்தி, புல்லாக்கு மற்றும் எல்லாவிதமான நகைகளும் தேவை படுகிறது. பக்தர்கள் மனமுவந்து இப்புண்ணிய க்ஷேத்திரத்தில் தென்னாட்டு பாணியில் ஆலயம் அமைப்பதற்கு தாராளமாக வழங்க வேண்டப்படுகிறது.

இவர்களுக்கும் மேற்கூறிய ப்ரஸாதங்கள் அனுப்பப்படும். இவைகள் தவிர, கோபுரம் மற்றும் உள்ள இடங்களுக்கு பஞ்சவர்ண வர்ணங்கள் தீட்டுவதற்கு 6000 ரூபாய் ஆகிறது. பக்தர்கள் வர்ண டின்கள் 5லிட்டர், 10லிட்டர், ப்ரஷ்கள், வர்ணங்கள் பச்சை. நீலம், சிகப்பு, வெள்ளை, மஞ்சள், எனமல் பெயிண்டாகவோ அல்லது நல்ல ஆயில் பெயிண்டு ரகங்களாகவோ தந்து உதவலாம்,

இப்பொருள்களை மதுரை ராணிபர்னிச்சர், 21, மேலாவணி மூலவீதி, மதுரை-625 001 க்கு அனுப்பலாம் அல்லது நேரிலும் செலுத்தலாம். அல்லது T.V.S. லாரி அல்லது ரோட் டிரான்ஸ்-போர்ட் கார்ப்பரேஷன் மூலமாக நேரடியாக ஹரித்வாருக்கும் அனுப்பலாம்.

Koviloor Digital Library

நன்கொடைகள் 31—3—1978 க்குள் வந்து சேர்ந்தால் கும்பாபிஷேக ஸ்ரீ கங்காமகாதேவி ஸ்ரீ கங்காஜலம் கலசம் நிர்ணயிக்க ஸவுகரியமாக இருக்கும்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ சங்கரா மிஷன்
C/o ராணிபர்ஸிச்சர்,
21, மேலாவணி மூலவீதி,
மதுரை-625 001.

மீனாக்ஷி இராமன்
செயலாளர்
ஸ்ரீ சங்கரா மிஷன்
C/o மதருஸி தர்மசாலா
ஹரித்வார் உ. பி. Pin 249 401

டிராப்ட் அனுப்புபவர்கள் யூனைடெட் கமர்ஷியல் பாங்க், எஸ்.பி. அக்.நிம். 2885/SB/503க்கும் அனுப்பலாம்.

ஸர்வ மங்களம் உண்டாகுக

மீனாக்ஷி இராமன்
நிர்வாகி
ஸ்ரீ சங்கரா மிஷன்
முகாம் : மதருஸி தர்மசாலா
ஹரித்வார் உ. பி. Pin 249 401



KOVILOOR MADAM
KOVILUR-630 30
MANAGIRI VIA

Koviloor Digital Library



சமர்ப்பணம்

''குருர் பிரம்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேச்வர
குருஸ்ஸாக்ஷாத் பரம் பிரும்ஹ
தஸ்மை ஸ்ரீ குருவே நம''
ஸ்ரீ சங்கர பகவத் பாத
குருஸ் ஸாக்ஷாத் சிஷ்ய பரம்பரை

குருக்களுடைய பாதங்களுக்கு மலரடி பணிகின்றேன். சொல்லும், பொருளும் இணைந்திருப்பதைப்போல் இணை பிரியாமல் இருக்கும் உமா சங்கரர்களின் பாதங்களில் இதை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

சர்வேஜனு; ஸுகிஞேபவந்து. ஓம்தத்ஸத்.


அடியேன்
மீனுக்ஷி இராமன்
ஸ்ரீ சங்கரா மிஷன்
21, மேல ஆவணிமூல வீதி, மதுரை-1.

முகாம்: C/o மதராஸி தர்மசாலா,
ஹரித்வார் 249 401 உ. பி.


Koviloor Digital Library



Koviloor Digital Library



ஸ்ரீ பகீரதர்



எலிகண்ட் பிரிண்டர்ஸ், மதுரை-1.